EGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 11உ வெள்ளி (26—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 12உ சனி (27—11—54) [இதழ் 142

அமெரிக்க இராணுவ ஒப்பந்த எதிரொலி?

பாகிஸ்தானில் இராணுவ ஒத்திகை ஒன்று நடைபெறப் போகிறதாம். பாக். இராணுவத்தின் இந்த ஒத்திகையைப் பார்வையிட பிரிட்டன், துருக்கி, இலங்கை ஆகிய நாடுகளின் உயர்தர இராணுவ அதிகாரிகள் வந்துள்ளனராம். ஆஸ்திரேலியாவிலிருந்தும் அதிகாரிகள் வரக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இந்த ஒத்திகைகள் மேற்கு பாகிஸ்தானில் ஏதேனும் ஓரிடத்தில் நடைபெறுமெனவும், இதுவரை இவ்வளவு பெரியதொரு இராணுவ ஒத்திகை பாகிஸ்தானில் நடைபெற்றதில்லை எனவும் தெரிகிறது.

தொடக்கக் கல்வி ஆய்வுக்குழு உறுப்பினர் நியமனத்தில் ஏமாற்றம்

அனுபவம் உள்ளவர்களையும், கிறித்துவக் கல்வித் துறையினரையும் நியமிக்காததற்கு வருத்தம்

சென்னை ஆசிரியர்களிடையே பெரும் அதிருப்தி

★

நடைமுறையில் இருந்துவரும் தொடக்கக் கல்வியை ஆராய நியமிக்கப்பட்டுள்ள ஆய்வுக் குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் பெயர்கள், பெரும்பான்மையினரான சென்னை ஆசிரியர்களுக்குத் திருப்தி தருவதாக இல்லை.

குழுவின் உறுப்பினர்களாக இடம் பெறுவதற்கான சிறப்பியல்புகள், நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் சிலரிடமாவது இருக்கின்றனவா என ஆசிரியர்கள் ஐயுறுகின்றனர். அக்குழுவில் இடம் பெறுவதை மெய்ப்பிப்பதற்கான, தொடக்கக் கல்வியில் முதிர்ந்த பயிற்சி பெற்றிருப்பவராக, ஒருவர்கூட அக்குழுவில் கிடையாது என அவ்வாசிரியர்கள் கருதுகின்றனர்.

கிறித்துவக் கல்வித் துறையினர், கல்வி வளர்ச்சிக்காகச் செய்துவரும் சேவைகளை, அமைச்சர்களும் மற்றப் பொதுவாழ்வினரும், தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் சிறப்பித்துப் புகழ்ந்துள்ளனர். அவர்களில் ஒருவருக்குக்கூட அக்குழுவில் இடம் தாராதது வியப்புக்குரியதாக இருக்கிறது.

சென்னை நகராட்சி மன்றத்தில் முன்னாள் கல்வி அதிகாரியாக இருந்தவரும், சமீப காலம்வரை தொடக்கக் கல்வித்துறை அதிகாரியாக இருந்தவரும், இப்பொழுது மாநில கல்வித் துறை அதிகாரியாக இருப்பவருமான ஒருவரைத் தவிர்த்து, குழுவில் இடம் பெற்றுள்ள மற்றவர்கள் தொடக்கக்கல்வியைக் குறித்து பெற்றுள்ள படிப்பினை மூடுமந்திரமாகவே உள்ளது.

தங்கள் ஆயுட்காலம் முழுதும் தொடக்கக் கல்வி போதனையிலேயே செலவழித்து வந்துள்ளவர்களில் ஒருவராவது, ஆய்வுக் குழுவில் இடம் பெறாதது, கல்வித் துறையினருக்குப் பேராச்சரியமளிப்பதாக இருக்கிறது.

—இவ்வாறு, சென்னை 'மெயில்' நிருபர், சென்னை ஆசிரியர்கள் பலரின் கருத்தைத் திரட்டித் தந்துள்ளார்.

சேர்க்கப்பட்டார்!

பாக். பஞ்சாப் மாநில கவர்னராயிருக்கும் ஹபீப் ரஹமதுல்லா, பாகிஸ்தான் மத்திய மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரையும் சேர்த்தால் புதிய மந்திரி சபையின் எண்ணிக்கை 10 ஆகிறது. நெருக்கடிக்கு முன்பாக, பாக். மந்திரியாக இருந்த முஷ்பிக்குர் ரஹ்மான், பஞ்சாப் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளாராம்.

தேர்தலைப் பாதிக்குமா?

ஆந்திர அமைச்சரவையின் கடைசிக் கூட்டத்தில், இராமமூர்த்திக் குழுவின் ஒரு சிபாரிசுக்கிணங்க, அன்னிய நாட்டுச் சாராயங்கள் வழங்குவதில் 'பர்மிட்' வழங்கும் விதிகளைத் தளர்த்துவதென்ற முடிவும், சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றைச் செய்ய பதனீர் இறக்கச் செய்த முடிவும், தற்போது இருந்துவரும் இடைக்கால அரசாங்கத்தால் அமுல் நடத்தப்பட மாட்டாதெனத் தெரிகிறது.

இவ்விஷயத்தில், ஆந்திர கவர்னர் திருவேதி எவ்வித முடிவுக்கு வந்தாலும், தேர்தலின் நிலைமையை அம்முடிவு பாதிக்காது என்றும், வரப்போகிற பொதுத் தேர்தலில் காங்கிரஸ், கம்யூனிஸ்டு ஆகிய இரண்டு கட்சிகளிடையே தான் மும்முரமான போட்டி இருக்கலாமெனவும், பிரகாசம் மந்திரி சபையின் இறுதித் தீர்மானம், இவ்விரண்டு கட்சியினரையும் திருப்திப்படுத்தவில்லை எனவும் சொல்லப்படுகிறது.

லட்சம் தொழிலாளர் வேலைக்குச் செல்லவில்லை

63 ஆலைகள் மூடப்பட்டன

அகமதாபாத் தொழிலாளர் தலைவர்களுள் ஒருவரான கேஷவ்ஜி—வகேலா என்பவர் கடந்த திங்களன்று காலமானதை ஒட்டி, சுமார் லட்சம் தொழிலாளர்கள், அவருக்கு தங்களது இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொள்ளும் வகையில் வேலைக்குச் செல்லவில்லை.

இதனால் இங்குள்ள 65 ஆலைகளில் 63 ஆலைகள் மூடப்பட்டிருந்தன.

காலஞ் சென்ற கேஷவ்ஜி, அகமதாபாத்தில் தொழிற் சங்கம் கண்டவர்களில் ஒருவர் எனத் தெரிகிறது.

விஷின்ஸ்கி சடலம் தாய் நாடு சேர்ந்தது

ரஷ்ய மக்களின் இறுதி வணக்கம்

நியூயார்க் நகரில் இயற்கை எய்திய 71 வயது முதிர்ந்த சோவியத் ராஜதந்திரியான விஷின்ஸ்கியின் சடலம் மாஸ்கோ வந்து சேர்ந்தது.

தங்கள் நாட்டு ராஜதந்திர நிபுணருக்கு, தங்களது இறுதி மரியாதையைத் தெரிவிக்க, ரஷ்ய மக்கள் கடுங் குளிரில் மணிக் கணக்காகக் காத்திருந்தனர்.

ஸ்டாலின் சடலம், வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே விஷின்ஸ்கியின் சடலமும் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறதாம்.

அவரது சவப் பெட்டியைத் தயாரிக்க ரூ. 40,000 செலவு செய்யப்பட்டது என்று தெரிகிறது.

பண்டிதர் அமைச்சர்குழுவில் நெருக்கடி?

காங்கிரஸ் மேலிடத்திலும் 'கோஷ்டிச் சண்டை!'

வல்லப பந்த் அமைச்சராவதற்கு அபுல்கலாம் ஆசாத் எதிர்ப்பா?

வி. கே. கிருஷ்ண மேனன் எதிர்ப்பை ஆசாத் கைவிட்டாராம்!

'பண்டிதர் அமைச்சர் குழுவில் புதிய நெருக்கடி முளைத்திருக்கிறது. அபுல்கலாம் ஆசாத் அவர்கள் எதிர்காலத்தில் அமைச்சராக இருப்பாரா அல்லது விலகுவாரா என்பதையே மையமாகக் கொண்டு, இப்புதிய நெருக்கடி உருவாகி இருக்கிறது.

காலஞ்சென்ற பட்டேல் அவர்களைத் துணைப் பிரதம மந்திரி என குறிப்பிட்டதுபோல் ஆசாத் குறிப்பிடப்படவில்லையானாலும், பட்டேல் காலத்திற்குப் பிறகு, ஆசாதே அமைச்சர் குழுவில் அனைவரிலும் முதியவராக இருந்துவருகிறார். அதனாலும், பிரதமர் அவரிடம் கொண்டிருக்கும் நம்பிக்கையினாலும், காட்டிவரும் அன்பினாலும், பிரதமருக்கு அடுத்தபடியாக உள்ளவர் ஆசாத் எனக் கருதப்பட்டுவருகிறார்.

இப்பொழுது, அதற்கு ஆபத்து ஏற்படும்போல் இருக்கிறது.

உத்தர பிரதேச முதல் மந்திரியாக இருக்கிற கோவிந்த வல்லப பந்தை மத்திய அமைச்சராக ஏற்றுக் கொள்வதினால், தனக்கு இப்பொழுது இருந்துவரும் மதிப்பு குறைந்துவிடக் கூடும் என ஆசாத் கவலை கொண்டிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

பண்டித பந்த், காங்கிரஸ் கட்சிக்குள்ளாகவே இருந்து வரும், ஆசாதுக்கு எதிரான கோஷ்டியின் தலைவராகும். அவரை அமைச்சராக ஏற்றுக் கொள்ளுவதின் மூலம் தனக்கு இப்பொழுது இருந்துவரும் பிரதமருக்கு இரண்டாவது இடத்தை அவர் பறித்துக்கொள்ள, தான் ஒப்ப முடியாது என ஆசாத் பிடிவாதமாக இருப்பதாகவும் தெரிய வருகிறது.

பண்டிதபந்தை ஒரு அமைச்சராக பண்டிதர் நியமித்துக்கொள்வாரானால், அபுல்கலாம் ஆசாத் தனது அமைச்சர் பதவியை விட்டு வெளியேறிவிடத் தயாராக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

திரும்பி வந்து ஆவன செய்து வருகிறார் என்று தெரிகிறது.

வட கிழக்கு இந்திய கிராமத்தில் கலவரம்

51 பேர் கொல்லப்பட்டனர்

ஷில்லாங், நவ. 25—

இந்தியாவின் வடகிழக்கு எல்லையோர 'ஏஜென்சி' பிரதேசத்தில், டியூன்சாங் டிவிஷனில், பாங்ஷா, இம்பாங் என்ற இரு கிராம மக்களுக்கிடையே கலவரம் ஏற்பட்டது.

இக்கலவரத்தில் இம்பாங் கிராம மக்களில் 57 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிகிறது.

பாங்ஷா கிராமத்தைச் சேர்ந்த தபால்காரர் ஒருவர் அக்டோபர் திங்களில் கொலை செய்யப்பட்டார் என்று தெரிகிறது. இக்கொலைக்கு இம்பாங் கிராம மக்களே காரணம் என்று சந்தேகிக்கப்பட்டதாம்.

நவம்பர் 15-ந் தேதியன்று இம்பாங் கிராம மக்களிடையே இக்கொலையைப் பாராட்ட விருந்து ஒன்று நடைபெற்றதாகத் தெரிகிறது.

இது கண்டு தங்கள் சந்தேகத்தை உறுதிப் படுத்திக்கொண்ட பாங்ஷா மக்கள், இம்பாங்கில் நுழைந்து தாக்கினார்கள் என்று தெரிகிறது.

இதனால், 57 பேர் கொல்லப்பட்டனர் என்றும், இம்பாங் கிராமத்தில் உள்ள வீடுகள் அனைத்தும் கொளுத்தப்பட்டதாகவும் தெரிகிறது. கொல்லப்பட்டவர்களில் சர்க்கார் ஆசிரியரும் ஒருவர் என்று தெரிகிறது. இந்த ஆசிரியரின் குடும்பத்தாருக்கு நஷ்டஈடு கொடுக்க சர்க்கார் ஆலோசித்து வருகிறதாம். கலவரம் நடைபெற்றபோது வேறு பகுதிகளுக்குச் சென்றிருந்த அதிகாரி உடன்

ஜெயப்பிரகாஷ் நாராயணன் 'மகாத்மிய'த்திற்குக் கண்டனம்

கட்சிக்கு மாறான 'பூமிதான' இயக்கத்தில் சேர்ந்ததற்கு எதிர்ப்பு

நடவடிக்கை எடுக்க சவுராஷ்டிர ம. சோ. கட்சி கிளை கோரிக்கை

ராஜ்கோட், நவ. 25—

மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் அதிகார பூர்வமான திட்டமாக இல்லாத பூமிதான இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றுகிறதாகக் கூறி திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென, சௌராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த மோர்வி கிளை ம. சோ. கட்சியினர் கோரியுள்ளனர் எனத் தெரிகிறது.

நேற்று கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானமொன்றில், 'இதுபற்றிய விளக்கம் நாக்புரி மாநாட்டில் தரப்பட வேண்டும்' என்றும் கோரப்பட்டுள்ளது.

"சர்வோதயத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, மனமாற்றம் பெற வேண்டுமென்னும் கொள்கையில் பணிபுரிவது பூமிதான இயக்கம் எனவே, அது, வர்க்கப் போராட்டத்தின் இறுதி லட்சியமான உற்பத்திசாதனங்களை தனிப்பட்டோரிடமிருந்து பிடுங்கி, பொதுச் சொத்தாக்குவதின் மூலம், வர்க்க பேதமற்ற சமுதாயத்தை நிறுவுவது என்ற மார்க்சியக் கோட்பாட்டிற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 26—11—1954 வெள்ளி

புதிய ஆய்வுக் குழு!

இன்றியமையாதத் தேவைகளாக உள்ள செல்வாக்கு முனைகளில் பார்ப்பனக் குடிமக்களுக்கு இருந்துவந்த ஆதிக்கம், காலம் கடந்து மெள்ள 'மெள்ளத் தலைகாட்டிய திராவிட இன மக்களின் போட்டியால், சிறுகச் சிறுகச் சீர்குலைந்து வருவதைத் தடுத்து, மேலும் குலைந்து போகவிடாமல் கட்டுப்படுத்தி, அம்முனைகளை, அம் மக்களின் நிலையான ஆதிக்க மண்டலங்களாக மாற்றி அமைக்கும் நச்சு நோக்குடன், எதிர்கால திராவிட இன மக்களின் கல்விக் கண்களைக் குருடாக்க, நடைமுறையில் உள்ள தொடக்கக் கல்வி ஏற்பாட்டை, மந்திகை மாலையெனப் பிய்த்தெறிய முற்பட்டார் அன்பர் ஆச்சாரியார், எதிர்பாராது தன் கை சிக்கிய அமைச்சர் அதிகாரத்தைக் கொண்டு! ஆச்சாரியார் திட்டத்தைக் கல்வி நிபுணர்கள் கண்டித்தனர். திட்டத்தின் பயனற்றத் தன்மையை நல்லறிவாளர்கள் எடுத்து விளக்கினர். சிறுர்களின் மனப்பாங்கு தெரிந்தவர்,ஒருவேளைபடிப்பால் சிறுர்களின் கல்வித் தரம் குறையும் என மொழிந்தனர். மனிதனை மனிதன் மதித்து நடந்து கொள்ள வேண்டிய இக் காலத்தில், மீண்டும் குலதர்மத்திற்குப் புத்துயிர் தருவது முறையா எனக் கூக்குரலிட்டனர் சமத்துவ நோக்கினர். அதிகாரத்தில் அமர்ந்துள்ளோம் என்ற அகந்தையால், நல்லவர் கூறிய அறிவுரையையும், கருத்துரையையும் அலட்சியப்படுத்தினர் ஆச்சாரியார்.

திட்டம் தீட்டிய திறமும், புகுத்திய முறையும், எதிர்ப்பை மதியாது இருக்கும் போக்கும், மக்களாட்சி முறைக்கு மாறுபட்டதாயிற்றே என்று, மக்களாட்சி முறைக்கு வளந்தேடும் உளம் பூண்டோர், ஆச்சாரியார் பிடிவாதம் நினைத்து நினைத்து நெஞ்சுருகிக் கண்களைக் குளமாக்கிக் கொண்டனர். இக்கண்ணீர் கண்டும் குல்லூக பட்டர் பிறவிக் குணத்தைத் துறந்து நடக்க முனைந்தார் இல்லை. 'முதலையும், மூர்க்கனும் கொண்டது விடா' என்ற மூதுரைக்கொத்ததோடு நடமாடும் இலக்கியமாகத் தன்னை ஆக்கிக் கொண்டார்.

திராவிட முன்னேற்றக் கழகம் போர்க் கொடி உயர்த்தியது; அறப் போர்க்களம் புகுந்தது; பல நூற்றுக்கணக்கானவர் சிறைக்கோட்டம் நண்ணினர். இத் தூய பணியின் உடனடி பலனுக, அமைச்சர் பதவியிலிருந்தே ஆணவ ஆச்சாரியாரை விரட்டியடித்திடும் ஓர் சூழ்நிலை, சொந்தக் கட்சிக்குள்ளாகவே புயலென வீசத் தொடங்கியது. ஆச்சாரியார், பதவியிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார். அவருடைய நச்சுத் திட்டமும், அவர் பதவியுடன் ஒருங்கு சேர்த்துப் புதைக்கப்பட்டது.

திராவிட இன மக்கள் எதிர்காலத்தில் கல்வி வளம் பெறும் வாய்ப்பைத் தள்ளி மூட, அமைச்சராக இருந்து ஆச்சாரியார் வெட்டிய பெரும் குழியில், அவருடைய பதவியும் வஞ்சகக் கோட்பாடும், இறுதியில் தள்ளப்பட்டுப் புதைக்கப்பட்டன.

அக்கொள்ளி வைக்கும் திருப்பணியையும் தன் திருக்கரத்தாலேயே செய்து முடிக்க வேண்டிய கட்டாயம் கல்வி அமைச்சர் கனம் சுப்ரமணியம் அவர்களுக்கே ஏற்பட்டது.

முற்பகலில், ஆச்சாரியார் முன்னீடராக இருந்து அக் கல்வித் திட்டத்தைச் சிறப்பித்து வானளாவப் புகழ்ந்து பிதற்றிக் கொண்டிருந்தவரும், அதே கனம்தான். தான் போற்றிப் புகழ்ந்த அதே திட்டத்தைக் குழியுள் தள்ளி மூடவும், மனம் கோணமல், நாணமல் முனைந்தவரும் அதே கனம் தான்!

சாதாரணமாகக் குப்பை மேட்டில் கிடந்த ஒரு கோவை வழக்கறிஞர், கொலு மண்டபம் எனும் கோபுரம் ஏறி கனம் ஆவது, இத்தகைய முரண்படும் செயல்களைச் செய்யவும், இழந்த மானத்தைப் பொருட்படுத்தாது நடந்து கொள்ளவும், தன் மனத்தைப் பண்படுத்திக் கொள்வதற்குத் தாப்படும் விலைதானே! இத்துறையில், கோவைக் குமரருக்கு இணை வேறு எவரும் கிடையாது.

ஆச்சாரியார் திட்டத்தை சட்டசபை முன் தன் திருவாயால் திரும்பப் பெற்ற பொழுதே கனம் கூறினர், தொடக்கக் கல்வியைத் திருத்தஞ்செய்து அமைக்க ஒரு ஆய்வுக் குழுவை நியமிக்கப் போவதாக. அக்கூற்றின்படி புதிய ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. அதன் உறுப்பினர் பெயர்களும், தலைவர் பெயரும் அறிவிக்கப்பட்டுள்ளன.

தொடக்கக் கல்வியின் தரத்தை எப்படி உயர்த்துவது என்பதைக் குறித்தும், அரசியல் சட்டத்தில் உள்ள பருவமடைந்த சிறுர்கள் அனைவருக்கும் கட்டாயக் கல்வி தரப்பட வேண்டும் என்ற உயர் இலட்சியத்தை நிறைவேற்றுவது குறித்தும், கல்விக் குழு கருத்துச் செலுத்தி, நடைமுறையில் உள்ள தொடக்கக் கல்வித் திட்டத்தை ஆராய்ந்து முடிவு கூறும் என்றும் கனம், குழுவின் கடமை பற்றி குறிப்பிட்டுள்ளார்.

அதுவுமன்றி, இன்றுள்ள தொடக்கப் பள்ளிகளை ஆதாரக் கல்விப்பள்ளிகளாக மாற்றி அமைப்பது பற்றியும், ஆசிரியர்களின் அந்தஸ்தை உயர்த்துவது பற்றியும் குழு ஆராயும் எனவும், கனம் கூறியுள்ளார்.

ஆதாரக் கல்வி எனச் சிற்சில இடங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள கல்வி, கவைக்குதவாதது எனவும், காட்டுமிராண்டிக் காலத்திற்கு மக்களைத் தள்ளிச் செல்லக்கூடியது எனவும், நல்லறிவாளர்கள் கருதுகின்றனர். ஆச்சாரியார் தொடக்கக் கல்வித் திட்டமானது ஆதாரக் கல்விக்கான முதற்படி என பாருலேகர் ஆய்வுக் குழுவும் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது. இதுபற்றி பின்னர் விளக்கமாக எழுதுவோம்.

புதிய ஆய்வுக் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர் அவர்களையும், உறுப்பினர்களையும் குறித்து நாம் கொஞ்சம் விழிப்பாகவே இருக்கவேண்டியதாக இருக்கிறது. தலைவராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் அழகப்பா அவர்களுக்குள்ள நவீன தொழில் கல்வி வளர்ச்சிப் பற்றும், அதற்காக அவர் செலவழித்து வரும் பெரும் செலவும் ஏற்கனவே நாடு அறிந்தே இருக்கிறது. அவருடைய நுண்ணறிவு, ஆதாரக் கல்வி அமைப்பை ஒப்புமா என்பது ஐயத்திற்குரியதாகும். கல்வித் துறையில் முற்போக்கான கருத்துடைய தலைமைக் கல்வி அதிகாரி, அதிகாரி என்ற முறையில் ஆதாரக் கல்விக்கு மாறுன முடிவைக் கருதுவாரா என்பதும் சிந்திக்கத்தக்கது. மற்ற உறுப்பினர்கள், 'ஆதாரக் கல்வியே நாட்டுக்கான ஜீவாதாரக் கல்வி' எனக் கூறுவார்களானாலும், அதில் நமக்கொன்றும் ஆச்சரியம் ஏற்பட நியாயம் கிடையாது. கனம் சுப்ரமணியத்தால் நியமிக்கப்பட்டவர்கள் என்றாலே, அந்த உறுப்பினர்கள் பற்றிய எல்லா உண்மைகளும் அதில் அடங்கி விடுகின்றன!

புதிய ஆய்வுக் குழு என்ன முடிவிற்கு வருகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

2,000 திபேத் மாணவர்கள்

சேஞ்சீனவில் தொழில் நுட்பப் பயிற்சி பெறுவர்

தொழில் நுட்பப் பயிற்சி பெறுவதற்காக, திபேத் நாட்டிலிருந்து சுமார் 2,000 மாணவர்கள் செஞ்சீன சென்றுள்ளனர் எனத் தெரிகிறது.

இவர்களைப் பயிற்சி பெற வருமாறு சீன அரசாங்கம் அழைத்திருந்ததின் பேரிலேயே அவர்கள் சென்றுள்ளனராம்.

தம்பதிகள் உண்ணு நோன்பு

உறுப்பினர்கள் வாக்குறுதியின் மீது கைவிட்டனர்

தாம் வேறு ஒரு ஊருக்கு மாற்றப்படுவதை எதிர்த்து திருச்சூரிலுள்ள ஒரு பள்ளியின் ஆசிரியை மேரி ஜோசப்பும், அவரது கணவர் டி. எஸ். ஜோசப்பும், அவ்வாசிரியையின் பள்ளி முன்பு உண்ணுவிரதம் இருந்தனரல்லவா?

இப்போது, அத்தம்பதிகள், தங்கள் உண்ணுவிரதத்தைக் கைவிட்டுவிட்டனர் எனக் கூறப்படுகிறது.

அந்த மாவட்டக் கழக உறுப்பினர்கள் சிலர், அவர்களுடைய குறைகளைத் தாங்கள் கவனிப்பதாக உறுதி கூறியதின்பேரிலேயே தங்கள் உண்ணுவிரதத்தை அவர்கள் கைவிட்டனராம்.

பிரிட்டன் அளிக்கும் உதவி

சில மாதங்களுக்கு முன்பு, வட-இந்தியாவிலேற்பட்ட வெள்ளத்தினுல் கஷ்ட நஷ்டமடைந்தவர்களுக்கு உதவ பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு லக்ஷம் பவுன்களை நன்கொடையாக அளித்தது. இதை மருந்துகள்—வைத்திய சாதனங்களாகப் பெற இந்தியா சர்க்கார் விரும்பிற்று. உடனே விமானங்களின் மூலம் ஊசி மருந்துகளும், இரத்தான சிகிச்சை சாதனங்களும் அனுப்பப்பட்டன.

கர்னுடக ஆதரவாளர்கள் ஏமாற்றம்

சேஷாத்திரி குழுவின் அறிக்கையின் விளைவு

நீலகிரியைக் கேட்க இயலாது என அறிவிப்பு

கர்னுடக மாநிலம் அமைப்பது பற்றிய எல்லா பிரச்சினைகளையும் ஆராயுமாறு மைசூர் சர்க்காரால் நியமிக்கப்பட்ட சேஷாத்திரி குழுவினர் தங்கள் அறிக்கையை சர்க்காரிடம் தந்துவிட்டனர் என்று தெரிகிறது.

இந்த அறிக்கை, கர்னுடக மாநிலம் வேண்டும் என்போரிடையேயும், 'மைசூர் மைசூர் மக்களுக்கே' என்போரிடையேயும் கருத்து வேற்றுமைகள் ஏற்படுமாறு செய்துவிட்டது என்று தெரிகிறது.

கர்னுடக மாநிலத்தின் எதிர்காலம் மகிழ்ச்சியுடன் இருக்குமென்று அக்குழு தெரிவிக்கவில்லையாம். பல்வேறு பிரச்சினைகளிலும், சேஷாத்திரி குழுவின் அறிக்கை, கர்னுடக மாநில ஆதரவாளர்களுக்கு ஏமாற்றத்தையே தந்திருக்கிறதாம்.

சென்னை, ஐதராபாத், ஆந்திரா, கூர்ஜரம் ஆகிய பிரதேசங்களைப் பற்றி 'சர்வே' செய்த பின்னர்,

"மொழியின் மீது அதிக நம்பிக்கை வைத்துப்போராடுவதின் மூலம் தீர்ந்துபோகும் என்று கருதப்படுகிற பிரச்சினைகளைக் காட்டிலும், ஏராளமான பிரச்சினைகள், இதனுல் புதிதாகத் தோன்றும் என்றுதான் எங்களுக்குத் தெரிகிறது,"

என்று குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது.

மைசூர் இல்லாத மற்றப் பகுதிகளில், 42,827 சதுர மைல்கள் கர்னுடகத்திற்கு இருக்கிறதாம்.

இப்பகுதியில் வாழும் 1,00,67,473 மக்களில்,70,19,896-மக்கள் கன்னடர்கள் என்று கூறிக்கொள்கின்றனர் என்று குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது.

இப்படி அமைக்கப்படுகிற கர்னுடக மாநிலம், 76,136 சதுர மைல்கள் பரப்புள்ளதாக இருக்குமென்றும், அதில் 1,99,16,157 மக்கள் இருப்பார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கர்னுடகப் பிரதேசக் காங்கிரசாரின் கோரிக்கைப்படி, கர்னுடக மாநிலத்தின் பரப்பு 85,000 சதுர மைல்கள் என்றும், மக்கள் தொகை 3,22,00,000 என்றும் தெரிகிறது. இவர்கள் விருப்பப்படி, கோவா வரையில் கர்னுடக மாநிலம் செல்கிறது.

சேஷாத்திரி குழுவினர், நீலகிரியை கர்னுடகத்தில் சேர்க்க முடியாது என்று கூறியுள்ளனர்.

புதிய மாநிலத்தின் பொருளாதாரப் பிரச்சினைகளில், கர்னுடகப் பிரதேச காங்கிரசின் கூற்றுக்கும் சேஷாத்திரி குழு அறிக்கைக்கும் மாறுபாடு காணப்படுகிறது.

புதிய மாநிலத்தில் அமுல் நடத்தப்படும் திட்டங்களினுல் ரூ. 36 கோடி கடன் இருக்குமென்றும், சர்க்கார்,செக்யூரிட்டிகளையும், இலாபத்தையும் எதிர்பார்க்க முடியாது என்றும் சேஷாத்திரி குழு எடுத்துக்காட்டியுள்ளது.

கர்னுடகப் பிரதேச காங்கிரசின் கருத்துப்படி கர்னுடக மாநிலம் பொருளாதாரத்தில் நிலைபெற்றிருக்குமென்றும், பூரணமதுவிலக்கு அமுல் செய்யப்பட்டாலும், வரவு—செலவுத் திட்டத்தில் மீதம் இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது, சேஷாத்திரி குழுவினரின் அறிக்கையை மைசூர் சர்க்கார் ஆராயுமென்றும், சட்டசபையில் விவாதத்திற்கு வைக்குமென்றும் தெரிகிறது.

அதன் பின்னர்தான், மைசூர் சர்க்கார், கர்னுடக மாநிலம் அமைப்பது பற்றி திட்டமான முடிவொன்றுக்கு வரும் என்று தெரிகிறது.

ஹங்கேரியின் முன்னுள் பிரதமர்

அதிகார பூர்வமான தொடர்பு கூடாது

மாநில அரசாங்கங்களுக்கு மந்திய அரசாங்கம் சுற்றறிக்கை

ஹங்கேரி நாட்டின் முன்னுள் பிரதம மந்திரியான பெரங் நாகி என்பவர், இப்போது இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து வருகிறுரல்லவா?

அவருக்கு, மாநில அரசாங்கங்கள், எவ்வித அதிகார பூர்வமான முக்கியத்துவங்களும் தரவேண்டாம் என்று மத்திய அரசாங்கம் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

"இப்போதுள்ள ஹங்கேரி அரசாங்கத்தின் அபிமானத்திற்குரியவர் அல்ல, நாகி; எனவே, அவருடன் அதிகார பூர்வமாகத் தொடர்பு கொள்வதினுல் 'அரசியல் குழப்பங்களு'க்கு வழியமைத்து விடக்கூடாது,"

என்று, அந்த சுற்றறிக்கை கூறுவதாகத் தெரிகிறது.

"ஹங்கேரி, மற்றும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளெல்லாம், தற்காலத்தில், சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்டு மிகக் கொடுமையான தொரு காலனிக் கொள்கைக்கு அந்நாடுகள் ஆளாக வேண்டியுள்ளது" என்று கல்கத்தாவில் பத்திரிகையாளரிடம், நாகி குறிப்பிட்டதாகச் சொல்லப்படுகிறது.

அவதூறுகளைப் பொறுத்துக் கொள்ள முடியாது

தென் கொரியாவிற்கு ஐ. நா. எச்சரிக்கை!

கொரியாவில் நடைபெற்ற யுத்த நிறுத்தத்திற்காகவும், சமாதானம் நிலை நாட்டப்படுவதற்காகவும் அங்கு பணிபுரியும் சர்வதேச மேற்பார்வைக் குழுவில் அங்கம் வகிக்கும் போலந்து, செக்கோஸ்லாவேக்கியா ஆகிய நாட்டுப் பிரதிநிதிகள் தென் கொரியாவைவிட்டு ஒரு வாரத்திற்குள் வெளியேறிவிட வேண்டுமென்று தென் கொரிய இராணுவ அதிகாரி ஒருவர் மிரட்டி இருந்தார் அல்லவா?

இப்போது அவரது பேச்சு குறித்து, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் கவலை கொண்டுள்ளன எனத் தெரிகிறது.

தூரக்கிழக்கில் உள்ள ஐ. நா. இராணுவ அதிகாரியான ஜெனரல் ஹல், தாக்ஷிக்கப்படுகிற சர்வதேசக் குழு உறுப்பினர்களுக்குப் பூரணமான பாதுகாப்புத் தருவார் என்று பிரிட்டிஷ் வெளி விவகார இலாகா கருத்தறிவித்துள்ளதாம்.

தேவைப்பட்டால், அந்த ஐ. நா. அதிகாரி, தன்னிடமுள்ள அமெரிக்கா, மற்றும் இதர நாடுகளைச் சேர்ந்த துருப்புகளையும்கூட உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் பிரிட்டிஷ் வட்டாரம் கருதுவதாகத் தெரிகிறது.

ஜெனரல் ஹல், ஐ. நா. இராணுவ அதிகாரி என்ற முறையில், தென் கொரியாவைச் சேர்ந்த சியோலுக்கு வந்து, டாக்டர் ரீயின் இராணுவ ஆலோசகர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர் எனத் தெரிகிறது.

ஐ. நா. மேற்பார்வைக்காக நியமித்துள்ள நடுநிலைக் கமிஷனைச் சேர்ந்தவர்களைப் பற்றி 'அவதூறு' கிளப்பி 'துஷ்பிரச்சாரம்' செய்து கொண்டிருப்பதை ஐ. நா. பார்த்துக் கொண்டிருக்க முடியாதென அவர், தென் கொரிய அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேயிலை ஏற்றுமதி

‘செஸ்’வரி இரட்டிப்பாக உயர்த்தப்படுகிறது

புதுடில்லி, நவ. 24— இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை மீது விதிக்கப்பட்டு வரும் ‘செஸ்’ வரியை, 100 ராத்தலுக்கு 5 ரூபாயாக இருந்ததை 4 ரூபாயாக உயர்த்த இந்தியப் பேரரசு முடிவு செய்துள்ளது.

அதற்கான ‘செஸ்’ வரியை உயர்த்தக் கோரும் மசோதா ஒன்றை மக்கள் சபையில் வர்த்தக மந்திரி கார்மார்க்கர் கொண்டுவந்துள்ளார்.

இப்போது இந்த வரி விதிப்பின் மூலம் இந்திய சர்க்காருக்கு ரூ. 85 லட்சம் கிடைத்து வருகிறது. இரட்டிப்பாக உயர்த்தப்பட்டால் ரூ. 1 கோடியே 70 லட்சம் கிடைக்கலாம்.

இப்படிக் கிடைக்கிற வருமானத்தை தேயிலை போர்டின் நிர்வாகச் செலவிற்கும், வெளிநாடுகளில் இந்தியத் தேயிலைகளின் பிரச்சாரத்திற்கும் பயன் படுத்துவார்கள் என்று தெரிகிறது.

★

இந்தியத் தேயிலையை பிரிட்டன் அதிகமாக வாங்குகிறது

நடை முதல் ஆண்டில், பிரிட்டனில், இந்தியத் தேயிலைக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் கொள்முதலும் கணிசமாக அதிகரித்திருக்கிறது: இவ்வாண்டு செப்டம்பர் முடிய ஒன்பது மாத காலத்தில் பிரிட்டன் 37,59,00,000 ராத்தல் தேயிலையைக் கொள்முதல் செய்திருப்பதில், இந்தியாவிலிருந்து கொள்முதல் செய்தது 21,47,15,000 - ராத்தல்களாகும்.

1953 அக்டோபர் கடைசி வாரத்தில் லண்டனில் நடந்த ஏலத்தில் வடஇந்தியத் தேயிலை ராத்தல் ஒன்றுக்கு 3½ ஷில்லிங்கிற்கும் விலை போயிற்று.

இவ்வாண்டு அக்டோபர் கடைசி வாரத்தில் வட இந்தியத் தேயிலை ராத்தல் ஒன்றுக்கு 6 ஷி. 8பென்ஸ் வீதமும் தென்னிந்தியத் தேயிலை ராத்தலுக்கு 6 ஷி. 4 பென்ஸ் வீதமும் விற்றது.

★

இந்தியத் தேயிலை— அமெரிக்கர் விருப்பம்

இந்தியாவிலும், இலங்கையிலும் வளரும் கருநிறத் தேயிலையை அமெரிக்கர் மிகவும் விரும்புகிறார்கள் என்றும், வேறு வகைத் தேயிலையைவிட அதுவே அவர்களுக்கு மிகவும் பிரியம் என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்கர் ஒருவர் சராசரி ஒரு வருடத்தில் இப்பொழுது பருகுவது 137 ‘கப்’புகளாகும். உலகத்தில் பயிராகும் மொத்தத் தேயிலையில் பத்தில் ஒரு பகுதி அமெரிக்காவில் செலவாகிறது. அதைவிட அதிகம் செலவாவது பிரிட்டனில்; பிரிட்டனுக்கு அடுத்தது அமெரிக்காவே.

அமெரிக்காவில் பெரிய நகரங்களில் இருப்போரைவிட நாட்டுப்புற வாசிகளே தேநீரை அதிகமாக விரும்புகிறார்கள்.

அமெரிக்கர் ஒருவர், ஒரு வருடத்தில் சராசரி பருகும் காப்பி 7,000 ‘கப்’புகளாகும்.

வ. உ. சி. இளைஞர் கழகம்

21—11—54 இரவு 9 மணிக்கு சென்னை சேத்துப்பட்டிலுள்ள கழக மனையில் திரு. சா. சு. மணி தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, தமிழர் திருநாளை ஜனவரி 14, 15 ஆகிய இரு நாட்களிலும் பல பேரறிஞர்களைக் கொண்டு சிறப்பாக கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தோழர் அன்பு-கணபதி, விழாவிற்கு, வரவேற்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வான்கூவர் ஓட்டலில் நிறபேதம்!

இந்திய மாணவருக்கு அனுமதி மறுப்பு

பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள கொலம்பியா பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் இந்திய மாணவர் ஒருவருக்கு வான்கூவரில் உள்ள பீர் ஓட்டல் ஒன்றில் அனுமதி மறுக்கப்பட்டதாம்.

இந்த மாணவர், ‘கறுப்பர்’ என்பதற்காகவே அனுமதி மறுக்கப்பட்டது என்று தெரிகிறது.

அதர் அலி என்னும் இந்த மாணவர், கொலம்பியா பல்கலைக் கழகத்தில், மீன் இலாகாவில் ஆராய்ச்சிக் கல்வி பெறுகிறார் என்று தெரிகிறது.

செயிண்ட் ஹெலினா என்னும் ஓட்டலுக்கு இவரும், இவரது நண்பர்களான நான்கு வெள்ளை இன மாணவர்களும் சென்றபோது, “கறுப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் சேர்த்து நாங்கள் பரிமாறுவது கிடையாது; அதனால் மிகுந்த தொல்லை ஏற்படுகிறது,” என்று அந்த ஓட்டலின் ‘வெயிட்டர்’ கூறிவிட்டாராம்!

தோழர் அலி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்; பிராணி நூல் கலையில் டாக்டர் பட்டம் பெற்றவர்; சென்ற செப்டம்பரில் மேல் படிப்புக்காகப் பிரிட்டிஷ் கொலம்பியாவுக்குச் சென்றார்.

இவர் அங்கே சென்றபோது, எமிகிரேஷன் இலாகாவினர், ‘கனடாவில் நிறபேதம் எதும் கிடையாது,’ என்று அவரிடம் கூறினார்களாம்.

மே. வங்கத்தில் நிலச் சீர்திருத்தம்

ஜமீன் முறை ஒழியும்

நஷ்ட ஈடும் தருவார்களாம்!

உழுபவனுக்கு நிலம் தருகிற வகையில் விரிவானதொரு நிலச் சீர்திருத்த மசோதா மேற்கு வங்க மாநில சட்டசபையில் வரும் ஜூலையில் துவங்கும் சபைக் கூட்டத்தின்போது கொண்டுவரப்படும் என அதிகார பூர்வமாகக் கூறப்படுவதாக அறியக் கிடக்கிறது.

மேற்கு வங்கத்தில் கொண்டு வரப்படும் இந்த நிலச் சீர்திருத்தம் ஜமீன்தார் முறை ஒழிப்பில் ஒரு பெரும் அம்சமாகுமென்றும், இந்த அளவு விரிவானதொரு நிலச் சீர்திருத்தம் இந்தியாவில் உள்ள வேறெந்த மாநிலத்திலும் இதுவரையிலும் கொண்டு வரப்படவில்லை என்றும் சர்க்கார் வட்டாரங்கள் கூறுகின்றனவாம்.

புதிய மசோதா, நியாயமான குடி வார நிர்ணயம், கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல் போன்றவைகளை உள்ளடக்கியிருப்பதுடன் எவ்வகை நிலமும் விற்கப்படும் பொழுது, விற்கப்படும் நிலம் உண்மையிலேயே விவசாயத் தொழிலில் நேரடியாக ஈடுபட்டிருப்பவருக்கே விற்கப்பட வேண்டுமென்றும் கூறுகிறதாகத் தெரிகிறது.

‘எஸ்டேட்டுகள்’ ஒழிக்கப்பட்டு அவை நிர்வகிக்கப்படுவதற்கான வேலைகள் துவங்கிவிட்டதாயும், ‘எஸ்டேட்டு’கள் எல்லாவற்றையும் வங்காளிப் புது வருடப் பிறப்பன்று சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமென்றும் தெரியவருகிறது.

சர்க்கார் எடுத்துக் கொள்கிற ‘எஸ்டேட்’டுகளின் அதிபர்களுக்கு நஷ்டஈடு தருவதற்கான ஏற்பாடுகளையும் சர்க்கார் கவனித்துவிடுகிறார்களாம்.

இலங்கைக்கு இந்திய வைத்திய நிபுணர்கள்

இந்தியாவிலிருந்து சில வைத்திய நிபுணர்களின் சேவையை மூன்றாண்டு காலத்திற்குக் கடனாகப் பெற்றுக் கொள்வது பற்றிய ஏற்பாடுகளை இலங்கையின் சுகாதார இலாக்கா மந்திரி சபை துரிதமாகச் செய்து வருகிறதாம்.

ஒன்பது இந்திய டாக்டர்கள்— பல துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவையை—ஆண்டொன்றுக்கு ரூ. 18 000 சம்பளம் தருவது என்ற ஒப்பந்தப்படி இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவிருக்கிறதாம்.

அதற்காக ஏற்கனவே இந்திய நிபுணர்கள் சுமார் 40 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்றும் தெரிகிறது.

வழியனுப்பு உபசாரம்

இந்திய அரசியலார் தேசீய சேமிப்பு இலாகாவின் கீழ், மதுரை மாவட்ட அலுவலராகப் பதவி ஏற்கும் திரு. பூ. கணேசன் அவர்களுக்கு, 21—11—54 இரவு 8 மணிக்கு வழியனுப்புக் கூட்டம் நடைபெற்றது.

நுங்கம்பாக்கம் தி. மு. கழகக் கிளை, மக்கள் மகிழ்ச்சி மன்றம், குறள் நெறி விழாக் குழு ஆகியவற்றின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தும், பாராட்டுக் கூட்டமும் சிறப்புற நடைபெற்றன. மேற்படி கழகங்களின் சார்பில் திரு. பூ. கணேசன் அவர்கட்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, பிரியாவிடை, வாழ்த்துரை வாசித்தளிக்கப்பட்டது.

பாராட்டுக் கூட்டத்திற்குத் தோழர் சி. வீ. பச்சையப்பன் தலைமை தாங்கினார். தோழர்கள் வ. சங்கரநாராயணன், மா. செங்குட்டுவன், தி. சு. கிள்ளிவளவன், இரா. பார்த்தசாரதி, இராதா, வையகத்தரசு, வேலாயுதம், நு. ரா. கோவிந்தசாமி, இலக்குவன், ஏ. எஸ். இளங்கோ மற்றும் பலர், திரு. பூ. கணேசன் அவர்களின் குண நலன்களையும், அன்னார் திராவிட இயக்கத்துக்கு ஆற்றியுள்ள அரும்பெரும் பணிகளையும் பாராட்டிப் பேசினர்.

இறுதியாக திரு. பூ. கணேசன், தனக்களிக்கப்பட்ட பாராட்டுதல்களுக்குப் பதிலளிக்கும் வகையில் பேசுகையில், தனது வாழ்நாளில் நுங்கம்பாக்கத்தை என்றும் மறக்க முடியாத அளவுக்கு அறிவியக்கப் பணியில் தன்னுடன் ஒத்துழைத்த நண்பர்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

அதே நாள் மாலை 5 மணிக்கு நுங்கம்பாக்கம் மக்கள் மகிழ்ச்சி மன்றத்தில் அன்னாருக்கு சிறியதோர் வெள்ளிப் பேழையும், ஒரு தேநீர் விருந்தும், பாராட்டும் நடைபெற்றன.

பெயர் மாற்றம்

8—11—54ல், இராமனாதபுர மாவட்டம், கீழ்குடி தோழர் சொக்க - தங்கம் அவர்களது பெயர் தோழர் என். வீ. மதிவண்ணன் அவர்களால் “தென்னரசு” என்று மாற்றியமைக்கப்பட்டது.

பிறப்பு

வட ஆற்காடு மாவட்டம் விளாப்பாக்கத்தில், தி. மு. கழகத் தோழர் ஆ. கா. வேலாயுதன் அவர்களின் துணைவியார் தாயம்மாள், 26—10—54ல் ஓர் ஆண் மகவு பெற்றெடுத்தார். தாயும்-சேயும் நலம்.

தோழர் தி. சு. குப்புசாமி அவர்களின் துணைவியார் பாஞ்சாலையம்மாள் 12—11—54ல் ஓர் ஆண் குழந்தை பெற்றெடுத்தார். குழந்தைக்கு ‘அன்புமணி’ என பெயரிடப்பட்டது. தாயும்-சேயும் நலம்.

கழக முன்னாள் செயலாளர் தோழர் தி. து. சீதா அவர்களின் துணைவியார் மீனம்பாள் 9-11-54 அன்று ஓர் பெண் மகவுக்குத் தாயாரானார். தாயும் சேயும் நலம்.

இவைகளின் நினைவாக மூவரிடமிருந்தும் ‘நம் நாடு’ வளர்ச்சிக்காக ரூ. 3 அன்பளிப்பாக வழங்கப்பட்டது — வரப்பெற்றோம் — மிக்க நன்றி–பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

இலக்குமநாயக்கன்பட்டி தோழர் இ. எல். எம். பழனிசாமி அவர்களது துணைவியார் 9-11-54 அன்று ஓர் ஆண் மகவுக்குத் தாயாரானார். அதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாக வழங்கப்பட்டது—வரப்பெற்றோம்—மிக்க நன்றி — பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

சோழவந்தான் அண்ணா படிப்பக பொருளாளர் தோழர் பே. குருசாமி அவர்களின் துணைவியார் இராசாமணி அம்மையார் 8—11—54ல் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார். குழந்தைக்கு ‘ஆசைத்தம்பி’ என பெயரிடப்பட்டது. அதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — மிக்க நன்றி—பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

சென்னை 24-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் தோழர் மு. பாலன் அவர்களது துணைவியார் தோழியர் இராதாபாய் அம்மை அவர்கட்கு 19—11—54 வெள்ளியன்று பெண் குழந்தை பிறந்தது; தாயும் சேயும் நலம். இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—மிக்க நன்றி — பொறுப்பாளர்.

மறைவு

சென்னை வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த தோழர் கே. வி. கே. சாமி என்பவர், விருதுநகரில் உள்ள தமது இல்லத்தில் இயற்கையெய்தினார் என்று விருதுநகர் தோழர் மு. தனுஷ்கோடி தெரிவிக்கிறார்.

தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் தி. மு. கழகத்தின் போராட்டங்கள் எல்லாவற்றிலும் கலந்துகொண்டதோடு, சென்ற ஆண்டு நடந்த மும்முனைப் போராட்டத்தில் 2 மாத காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அதன் காரணமாக அவர் தம் உடல் நலங்குன்றி இயற்கை எய்தியுள்ளார். அவருடைய குடும்பத்தினருக்கு நமது அனுதாபம் உரித்தாகுக. (ஆ-ர்.)

* * *

வடகோவை தி. மு. கழக உறுப்பினர் தோழர் ஜே. டி. தாஸ், 12—11—54-ல் இயற்கை எய்தியமை குறித்து அவரது குடும்பத்தாருக்கு, கழகச் சார்பாக அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. நமது அனுதாபமும் உரித்தாகுக. (ஆ-ர்.)

* * *

13—11—54 மாலை 2 மணிக்கு, சென்னை எழுகிணறு இலட்சிய நடிக மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் தோழர் டி. கே. கோவிந்தராசன் இயற்கை எய்தியமைக்கு மன்றத்தின் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. நமது அனுதாபமும் உரித்தாகும். (ஆ-ர்.)

தென் துருவம்: இயற்கையின் ‘கூத்து’க்களைக் கணிக்கும் இடம்!

‘விபரீதம்’ நிறைந்த நிலப்பரப்பில் விஞ்ஞானிகளின் அரிய சேவை!

உலகின் வெப்பதட்ப நிலையின் மூலஸ்தானம் தென் துருவப் பகுதிதான். பருவக் காற்றுகள் அங்கிருந்துதான் கிளம்புகின்றன. பூதத்துவ, பௌதீக ஆராய்ச்சிக்கு ஏற்ற இடம் அது; அங்கு நடக்கும் இயற்கையின் ‘கூத்து’க்களைக் கவனிப்பதன் மூலம், வானிலை ஹேஷ்யங்களைக் கூறுவது சாத்தியம்.

தனிமையும், குளிரும் நிறைந்த அந்தப் பனிப் பிரதேசத்தில், சேவையையே குறிக்கோளாகக் கொண்ட விஞ்ஞானிகள் வாழ்வார்கள். மலையும், காடும் நிறைந்த நிலப்பரப்பை எப்போதும் வெண்பனி மூடிக்கொண்டிருக்கும். மலைகளிலிருந்து சிற்சில சமயங்களில் பனிப் பாறைகள் சரிந்தோடும். நிலமும், நீரும் பேதப்படுத்த முடியாதவாறு, ஆண்டில் பெரும்பகுதி, பனியாக உறைந்துகிடக்கும்; வருடத்தில் மூன்று அல்லது நான்கு மாதங்களில்தான் சூரிய வெளிச்சம் பட்டு, பனி உருகி, நிலமும் நீரும் பிரிந்து நிற்கும்.

தென் துருவப் பகுதியில் மிகப் பெரிய நிலப் பரப்பு இருக்கிறது. ஐரோப்பாவையும், ஐக்கிய அமெரிக்க நாடுகளையும்சேர்த்தால் இருக்கக் கூடிய அளவுள்ள அந்த நிலப் பரப்பில், பாதிக்குமேல் காமன்வெல்த் நாடுகளின் ஆதிக்கத்திலிருக்கிறது. இந்த நிலப்பரப்பின் மத்தியில்தான் தென் துருவம் இருக்கிறது.

தென் துருவப் பகுதியில் விஞ்ஞானத் தகவல்களைச் சேகரிக்க, சென்ற 4—10—54 அன்று ‘ஜான் பிஸ்கோ’ என்ற கப்பல், பிரிட்டனிலிருந்து புறப்பட்டது. இந்தக் கப்பலிலுள்ள விஞ்ஞானிகள், தென் துருவப் பகுதியில் இரண்டு ஆண்டு காலம் தங்குவார்கள். ரேடியோவும், கம்பியில்லாத் தந்தியும்தான் வெளியுலகத்திற்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு.

‘இந்தப் பனிக்காட்டில், நமக்கு அக்கரை எதற்கு?’ எனச் சிலர் கேட்கலாம். அங்கு பொருட்செல்வமுண்டு; விஞ்ஞான ஆராய்ச்சிக்கு இடமுண்டு; எதிர்காலத்தில் உலகப் போக்கையே மாற்றக் கூடிய வசதிகளும் உண்டு.

தென்துருவக் கடலில் திமிங்கல வேட்டையாடுவதால் வருடத்திற்கு சுமார் 30,000,000 பவுன் மதிப்புள்ள திமிங்கல எண்ணெய் கிடைக்கிறது. கனிச் சுரங்கங்கள் வேறு அங்கு உண்டு.

வேறு ஒருவித இலாபமும் உண்டு. எதிர்காலத்தில், தென் துருவப் பிரதேசங்களின் மூலமாக விமானப் போக்குவரத்து ஏற்படக் கூடும். பரந்த கடற்பகுதியைத் தாண்டி ஆயிரக்கணக்கான மைல்கள் விமான மூலம்’ பறப்பதைவிட, நிலப் பரப்புள்ள தென்துருவத்தின் வழியே பிரயாணம் செய்வது பாதுகாப்பானது.

விமானப் பிரயாணம் துவங்குவதற்கு முன்பு அந்தப் பகுதியைப் பற்றி பல விஞ்ஞானத் தகவல்கள் சேகரிக்கவேண்டும்; நிலப்பரப்பை அளந்து பூகோளப் படம் தயாரிக்க வேண்டும்; அங்கங்கு வானிலை நிலையங்களை நிறுவி, பருவ மாறுதலையும், இதரத் தகவல்களையும் பதிந்து கொள்ளவேண்டும்; ரேடியோ–தந்தி வசதிகளைச் செய்வதற்கான சோதனைகளைச் செய்ய வேண்டும்; துருவத்தின் காந்த இயல்புகளைக் கவனிக்க வேண்டும்; இப்படிப் பல பல துறைகளில் பூர்வாங்க வேலைகளைச் செய்வது அவசியம்.

இவற்றை ஒரே நாளில் செய்துவிட முடியாது. தென் துருவப் பிரதேச ஆராய்ச்சியில் ஈடுபட்ட நாடுகள் இம்முயற்சிகளை நல்லுறவுடன் செய்தல் வேண்டும். மேலும், தனியான அந்தப் பனிக்காட்டில், உறுதியும் தைரியமுங்கொண்ட விஞ்ஞானிகள் சென்று தங்கி, சேவை செய்ய வேண்டும். அதற்குத் துணையாக நிற்க விஞ்ஞானிகளை ஏற்றிக்கொண்டு ‘ஜான் பிஸ்கோ’ கப்பல் சென்றிருக்கிறது.

மக்கள் சோஷலிஸ்டு - கட்சியில் பிளவு!

ஆச்சாரிய நரேந்திர தேவ் முயற்சி தோல்வி!

புயல் வீசுகிறது ! — பட்டம் பேசுகிறர் !

நாகபுரி, நவ. 25—

மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் தனி மாநாடு இன்று துவங்கியுள்ளது.

திரு—கொச்சியிலிருக்கும் பட்டம் தாணுவின் மந்திரிசபை இராஜினமாச் செய்ய வேண்டுமென டாக்டர் லோகியாவும், அவரது ஆதரவாளர்களும் கோருகின்றனர். அவர்கள் தங்கள் முடிவை மாற்றிக்கொள்ளத் துளியும் சம்மதிக்கவில்லை எனத் தெரிகிறது.

ஆச்சாரிய நரேந்திர தேவ், கட்சியின் 'உச்சி'யில் ஏற்பட்டுள்ள பிளவுகளை சரிக்கட்டுவதற்காகச் செய்த முயற்சிகள் பலன் ஏதும் தரவில்லை என்று தெரிகிறது.

டாக்டர் லோஹியா குழுவினர் தங்கள் செயற் குழு உறுப்பினர் பதவிகளை ராஜினமா செய்துவிட்டமையால் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

தேசிய செயற்குழுவில் திரு—கொச்சி போலீசார் தமிழர் மீது நடத்திய துப்பாக்கிப் பிரயோகப் பிரச்சினை மீது மிகக் கடுமையான விவாதம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

பட்டம் தாணுப்பிள்ளை விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் 'தனது மந்திரி சபை' ராஜினமா செய்வதால் ஏற்படும் 'பின் விளைவுகள்' குறித்துப் பேசினராம்.

நிருபர் ஒருவரிடம் பேசுகையில் அவர் 'தனது மந்திரி சபை ராஜினமாச் செய்வதற்குச் சந்தர்ப்பமே இல்லை' என்றும் கூறியிருக்கிறர் எனத் தெரிகிறது.

"செயற் குழுவின் முன்னுள்ள தீர்மானமெல்லாம், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதை எற்றுக்கொள்வதா, நிராகரிப்பதா? என்பதுதான். செயற்குழு, ஏதேனும் ஒரு முடிவுக்கு திட்டவட்டமாக வந்தாக வேண்டும்" என்று சதிக் அலி என்ற ம. சோ. கட்சித் துணைச் செயலாளர் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

ம சோ. கட்சி மாநாட்டில் புயல் வீசிக்கொண்டிருக்கிறது. விளைவுகள் எதிர்பார்க்கப்பட வேண்டியவையே.

பாங்கி ஊழியர் வேலை நிறுத்தம்

நாடெங்கும் 'போராட்ட வாரம்'

பம்பாய், நவ. 25—

இந்தியத் துணைக் கண்டமெங்கனுமுள்ள பாங்கி ஊழியர்கள், தாங்கள், டிசம்பர் 10 முதல் துவக்கவிருக்கும் வேலை நிறுத்தத்தை ஒட்டி, இன்று முதல் ஒரு வாரத்தை 'போராட்டவாரமாக'க் கொண்டு செயலாற்றி வருகின்றனர்.

துணைக்கண்டத்தில் உள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் போராட்ட வாரம் சிறப்புற எற்பாடு செய்யப்பட்டுள்ளதாம். ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவை துவங்கப் பெற்றுள்ளன.

பம்பாய் இம்பீரியல் பாங்கியின் முன்கூடி, சுமார் 1000 பாங்கி சிப்பந்திகள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். பலரும் போராட்ட வாரச் சின்னங்கள் அணிந்துகொண்டிருந்தனராம்.

சென்னையில், பாங்கி ஊழியர் போராட்டத்தை ஆதரித்து சர்வ கட்சிக் கூட்டமொன்று நடைபெறுகிறது. பல்வேறு தொழிற் சங்கத்தவரும், பாங்கி ஊழியருக்கு தமது முழு ஆதரவைத் தருவதாக வாக்களித்துள்ளனர் எனத் தெரிகிறது.

★

பரோடா பாங்கி ஊழியர் திடீர் வேலை நிறுத்தம்

சென்னையில் உள்ள பரோடா பாங்கியில் பணியாற்றிவந்த ஒருவரை வேலையிலிருந்து நீக்கியதைக் கண்டிக்கும் வகையில், பாங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிகிறது.

பெரியார் அவர்கள் ரங்கூன் பயணம்

புத்தர் மாநாட்டில் கலந்து கொள்கிறர்

ரங்கூனில் அடுத்த மாதம் 3-ந் தேதி நடைபெறவிருக்கும் புத்தர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, அந்த மாநாட்டினரின் அழைப்பிற்கிணங்க பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள், இன்னும் பலருடன் கடந்த 24-ந் தேதியன்று மாலை சென்னையிலிருந்து "எஸ் எஸ். ஜலகோபால்" கப்பல் மூலம் பயணமானர்கள்.

ஏராளமான பொது மக்களும், இயக்கத் தோழர்களும் துறைமுகம் வந்திருந்து பெரியார் அவர்களுக்கு மாலை சூட்டி வழியனுப்பி வைத்தனர்.

சீனிவாச அய்யருக்கு 2 ஆண்டு கடுங்காவல்

சென்னை, நவ. 25—

கடந்த ஏப்ரல் மாதம் 7-ந் தேதியன்று சென்னை சேத்துப்பட்டைச் சேர்ந்த ஏ. எஸ். சீனிவாச ஐயர் என்பவர், தான் ஒரு டிக்கட் பரிசோதகர் எனக் கூறி, பத்மா என்ற ஒரு பெண் பிரயாணியிடமிருந்துபெட்டி,கைப்பை இவற்றை திருத்தணி ரயில்வே ஸ்டேஷனில் பெற்றுக்கொண்டு, அரக்கோணத்தில் திருப்பித் தருவதாக ஏமாற்றி வழியில் பெட்டி, கைப்பையுடன் இறங்கிப் போய்விட்டாராம். இதனால் அந்தப் பெண் சுமார் ரூ. 130 நஷ்டமடைந்ததாகக் கூறப்படுகிறது.

அந்த ஐயர் மீது, இ. பி. கோ. 420-வது பிரிவின் கீழ் மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடர்ந்ததில், சென்னை எட்டாவது மாகாண நீதிபதி எதிரிக்கு இரண்டு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்தார்.

கிங்காங் - மணம் - செய்துகொள்கிறர்!

உலகப் புகழ் பெற்ற மல்யுத்த வீரரும், 450 ராத்தல் எடை கொண்ட 'மாமிச மலை'யுமான கிங்காங், மண வாழ்க்கையை மேற்கொள்ளப் போகிறராம்.

இவருக்கு வயது 54 ஆகிறது. நாகபுரியைச் சேர்ந்த 35 வயதுடைய ஜாயிஸ் பிரான்ஸிஸ் என்ற பெண்ணைத்தான், அவர் துணைவியாக்கிக் கொள்கிறர். அந்தப் பெண், எற்கனவே கிங்காங்கின் செயலாளராக நீண்ட காலங்கள் பணியாற்றியவர் எனத் தெரிகிறது.

மணத்திற்குப் பிறகு சிங்கப்பூர் சென்று தனது எஸ்டேட் விவசாயத்தில் ஈடுபட கிங்காங் முடிவு கட்டியுள்ளார் எனவும் தெரிகிறது.

சணல் சாகுபடி

நடப்பு ஆண்டில், சணல் சாகுபடி விஸ்தீரணம், 12,73,000 ஏகராவும், உற்பத்தி அளவு 31,53,900 பேல்களும் (ஒவ்வொன்றும் 400 பவுண்டு நிறையுள்ளது) ஆக இருக்குமென்று தெரியவருகிறது.

கழகக் கூட்டங்கள்

★

கீரம்பூர் (துறையூர்)

ஊர்ப் பொதுத் திடலில்

28—11—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

என். வி. நடராசன்

அழகமுத்து

★

திண்டுக்கல்

வ. உ. சி. திடலில்

28—11—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: ம. சுந்தரராசு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

என். முத்து

ஏ. சுப்பையா

★

திருவிடைமருதூர்

தெற்கு வீதியில்

28—11—54 ஞாயிறு மாலை

தலைவர்: ஏ. வெங்கடேசன்

பேசுவோர் :

இரே. இளம்வழுதி

டி. எஸ். இராசப்பா

டி. ஏ. இராமசாமி

★

மதுரை

திலகர் திடலில்

28—11—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

மு. கருணாநிதி

எஸ். எஸ். இராசேந்திரன்

* * *

தோழர்கள் மு. கருணாநிதி, எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் காலை 8 மணிக்கு திருமண நிகழ்ச்சியிலும், மாலை 4 மணிக்கு திடீர்நகரில் நடைபெறும் வரவேற்பிலும் கலந்துகொள்வர்.

சென்னை 42-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்டு

"28-11-54 மாலை 6 மணிக்கு, திருவல்லிக்கேணி, எண் 10, உசைப் செட்டித் தெருவில், திருவல்லிக்கேணி தி. மு. கழக (42-வது வட்ட) உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் கருணாநிதி தேர்தெடுக்கவேண்டிய பிரச்சினை தேர்தல் வட்ட கழகத் தோழர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு வருகைதர வேண்டுகிறேன்," என்று சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் அறிவித்துள்ளார்.

சென்னை 26-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்டு

28-11-54 காலை 9 மணிக்கு, சென்னை 26-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது செயலாளர் தேர்தல் நடைபெறும்.

சென்னை, சூளை தி. மு. கழக பொது உறுப்பினர்கட்டு

28-11-54 மாலை 3 மணிக்கு, சென்னை, சூளை தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது நிர்வாகக்குழு நடவடிக்கைகள் தேர்தெடுக்கப்படும்; கழக வேலைத் திட்டங்கள் பற்றியும்; தீர்மானங்கள் (கழக கம்பன்நடவைகள்); கழக வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்படும்.

பம்பாய் தி. மு. கழக மாவட்டக் குழு உறுப்பினர்கட்டு

28-11-54 மாலை 6-30 மணிக்கு, பம்பாய், தாராவி குடியாக் வீதியிலுள்ள, பம்பாய் தி. மு. கழக மாவட்டக் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். பொருள்: பொங்கல் விழாவை எவ்வாறு கொண்டாடுவது; பொங்கல் விழாவில் கலந்துகொள்ள நாடகத்திலிருந்து ஒரு சொற்பொழிவாளரை அழைப்பது.

திருக்குறள் விழா

28-11-54 மாலை 5 மணிக்கு, பொன்னேரி வட்டம், தேவம்பட்டு திருவள்ளுவர் மன்றத்தின் திருக்குறள் விழா நடைபெறும். தோழர் என. வே. பெரியசாமி, முகவை ஆர். எம். பரமன், தோழர் ஓர்ஹோரை ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

28-11-54 காலை 9 மணிக்கு, சென்னை 50-வது வட்டம் தி. மு. கழகத்தில், தோழர் எ. ஈ. ஆதி மூலம், தலைமையில், 'கமது குறள்' என்ற தலைப்பில் தோழர்கள் பாலுப்பன், கோ. இளவரசு, பன்னீர்செல்வம், சி. சங்கர், வி. சிந்தினசெழியன் ஆகியோர் பேசுவர்.

* * *

28-11-54 காலை 10 மணிக்கு, சென்னை 14-வது வட்ட அறிவகம் மன்றத்தில் தோழர் டி. புருடோத்தமன் தலைமையில் 'வரலாற்றில் திராவிடர்' என்ற தலைப்பில் பலர் பேசுவர்.

இசைமுரசு நாகூர் அனீபா தந்தையானர்

இசைமுரசு நாகூர் அனீபா அவர்களும் துணைவியாரும் 26-11-54 வெள்ளியன்று காலை 8-15 மணி அளவில் பெண் மகவொன்றை ஈன்றெடுத்துள்ளார். தாயும் சேயும் நலமே உள்ளனர்.

ஜெயப்பிரகாஷ்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அடிப்படையிலேயே முரண்பட்டதாகும்."

என்று தீர்மானம் கூறுகிறது.

"திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் பூமிதான இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றுவதானது மக்களிடையே, பூமிதான இயக்கம் ம. சோ. கட்சியின் திட்டங்களில் ஒன்று, என்ற தவறான கருத்தை உண்டுபண்ணுகிறது; எனவே, ம. சோ. கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர், இந்த பூமிதான இயக்கத்தில் பணியாற்றுவது பொருந்துக்கொள்ள இயலாதது; எனவே, அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்,"

என்றும் அத்தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

பண்டிதர் அமைச்சர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இதற்கு நேரு ஒப்புவாரா என்பது புதிராக உள்ளது.

ஏனெனில், பண்டிதர் அமைச்சர் அவையில். அபுல்கலாம் இடம் பெற்றிருப்பதானது, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள நான்கு கோடி முஸ்லிம்களுக்கும் நம்பிக்கையூட்டுவதாக இருந்துவருகிறது. அவர் பதவியைத் துறப்பதின் மூலம், இந்த நம்பிக்கைக்கு ஊனம் ஏற்படக்கூடும் என அஞ்சப்படுகிறது. இந்த அச்சத்தின் காரணமாக அபுல்கலாம் அமைச்சர் குழுவை விட்டு வெளியேறுவதை பண்டிதர் அனுமதிக்கமாட்டார் எனவும் நம்பப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இல்லை என்பதற்காகப் பண்டிதரின் ஆப்த நண்பரான வி. கே. கிருஷ்ணமேனன் ஒரு அமைச்சராவதையும், அபுல் கலாம் ஆசாத் ஆரம்பத்தில் எதிர்த்தார். ஆனல், இறுதியில் அதற்கு ஒப்பி விட்டார் எனவும் சொல்லப்படுகிறது.

எது எப்படி இருந்தாலும், எவர் நியமிக்கப்படுவதாக இருந்தாலும், பதவி மோகமும், போலிமதிப்பும்,கோஷ்டிப் பகையும், காங்கிரஸ் மேலிடத்தையும் விட்டபாடில்லை என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது.

சீனவில் தண்டிக்கப்பட்ட அமெரிக்கர்கள்

விடுவிக்க முயற்சி

செஞ்சீனவில் தண்டிக்கப்பட்டு சிறையிலிருந்து வரும் 13 அமெரிக்கர்களை விடுவிப்பதற்கு எல்லா விதமான முயற்சிகளையும் தாம் மேற்கொண்டிருப்பதாக அமெரிக்க ஜனதிபதி ஐக் தெரிவித்துள்ளார்.

(1951 முதல் சீன எல்லைக்குள் 'பாரசூட்' மூலம் இறங்கிய 124 - அமெரிக்க ஒற்றர்கள் பிடிபட்டதாகவும் மற்றும் 106 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதாகவும் செஞ்சீன அறிக்கை ஒன்றின் மூலம் அறியக் கிடக்கிறது.)

பத்திரிகாசிரியர் கைது

புதுடில்லி, நவ. 24—

'புல் ஐ' என்னும் ஆங்கில வார இதழின் ஆசிரியர் காப்டன் ஆனந்த சிங் என்பவரை, டில்லி போலீசார் தடுப்புக் காவல் சட்டத்தின் மூன்ருவது பிரிவின் படி கைது செய்துள்ளார்கள்.

இப்பத்திரிகையில், இந்தியாவுக்கும் வெளி நாடுகளுக்கும் இடையே நட்புறவைக் கெடுக்கும் வகையில் எழுதப்பட்டதாகவும்; அதைத் தடுக்கவே மத்திய சர்க்கார் ஆனந்த் சிங்கை கைது செய்துள்ளதாகவும் தெரிகிறது.

இரண்டு உயர்தர போலீஸ் அதிகாரிகள் பத்திரிகாலயத்தைச் சோதனையிட்டனராம்.

நகரசபை கூட்டத்தில் குழப்பம்

ஒழுங்குமீறிப்பேசிய அங்கத்தினர்களை போலீசார் வெளியேற்றினர்

மதுரை, நவ. 25—

மதுரை நகரசபைக் கூட்டத்திலிருந்து நகரசபை அங்கத்தினர்கள் சிலரை பலவந்தமாகப் போலீசார் வெளியேற்ற வேண்டிய ஒருநிலை எற்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

'மார்க்கெட்'டிலுள்ள கடைகளை வாடகைக்கு விடுவது பற்றி திரு. ஹீரா என்பவர். கொண்டு வந்த திருத்தம், வாக்கெடுப்பின் போது தோல்வியுற்றது. இதைத் தொடர்ந்து ஹீரா நகரசபை அங்கத்தினர்களின் போக்கினைத் தாக்கிப்பேசினர்.

சபைத் தலைவர் பேச்சை நிறுத்திக் கொள்ளக் கூறியும் அவர் மறுத்துவிட்டார். பின்னர் போலீசார் வரவழைக்கப்பட்டு, போலீஸ் இன்ஸ்பெக்டரால் அந்த அங்கத்தினர் வெளியேற்றப்பட்டிருக்கிறர். இன்னும் ராமலிங்க அய்யர், குருசாமி, சந்தானம் ஆகியோரும் சபை ஒழுங்கை மீறிப் பேச ஆரம்பித்ததால் அவர்களும் போலீசாரால் வெளியேற்றப்பட்டனர்.

சபை தொடர்ந்து நடைபெற ஆரம்பித்தது. பின்னும் வெளியேற்றப்பட்ட அங்கத்தினர்கள் உள்ளே புகுந்தனர். அப்போதும் அவர்களை போலீசார் பலவந்தமாக வெளியேற்றியிருக்கின்றனர் என்று செய்திகள் கூறுகின்றன.

காங்கிரஸ் - முஸ்லிம் லீக் மோதுதல்

கோழிக்கோடு அருகே 10 பேர் கைது

கோழிக்கோடு, நவ. 24—

கோழிக்கோடுக்கு அடுத்த பாம்பனங்காடி கிராமத்தில், முஸ்லிம் லீகர்களுக்கும்—காங்கிரசாருக்கும் இடையே கலவரம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

நவம்பர் 20-ந் தேதியன்று நடைபெற்ற இக்கலவரத்தை யொட்டி போலீசார் லீக் ஆதரவாளர் எனப்படுவோர் ஐந்து பேரையும், அதுபோல காங்கிரசின் ஆதரவாளர் எனப்படுவோர் ஐந்து பேரையும் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது.

அண்மையில் நடைபெற்ற ஜில்லா போர்டு தேர்தலையொட்டி கட்சிகளிடையே எற்பட்ட கருத்து வேற்றுமையினல் இக்கலவரம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

'மனுநீதி சோழன் பரிசு'

திருவாரூர், நவ. 24—

திருவாரூர் நகரசபைக் கூட்டத்தில், திருப்பனந்தாள் மடாதிபதியினல் ரூ. 3,500 மூலதனத்தைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் 'மனு நீதி பரிசு'க்கான நிதியை ஒப்புக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

22-ந் தேதி நடைபெற்ற இக்கூட்டத்திற்கு நகர சபைத் தலைவர் ஏ. சாம்பசிவன் தலைமை வகித்தார்.

இத்தொகையின் மூலம் கிடைக்கும் வருமானம் திருவாரூர் நகர சபை எல்லைக்குள் சிறந்த முறையில் வளர்க்கப்படும் பசுக்களின் சொந்தக்காரர்களுக்கு அளிக்கப்படுமாம். இப்பரிசு, மனுநீதி சோழனின் ஞாபகார்த்தமாக அளிக்கப்படுமாம்.

நடப்பு ஆண்டில், எள்ளு சாகுபடி விஸ்தீரணம் 45,40,000 ஏகராவாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.